

சிவகங்கை நகரில் பாராளுமன்ற மேலவை உறுப்பினர் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப சிதம்பரம் தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய் 2 கோடியில் கட்டப்பட உள்ள பேருந்து நிலைய பணியினை கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கார்த்தி ப.சிதம்பரம் எம்பி , மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் ,எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. நகராட்சி ஆணையர் கிருஷ்ணகுமார் உட்பட நகர் மன்ற உறுப்பினர்கள் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி உறுப்பினர்களால் பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தை அமைச்சர் மூர்த்தியிடம் வழங்கினார். மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் மதுரை மேற்கு தொகுதி பார்வையாளர் திலிப் ராஜ கண்ணப்பன் BLA2 உறுப்பினர்களால் பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தை அமைச்சர் மூர்த்தியிடம் வழங்கினார்.

### அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவேற்ற

# உள்ளாட்சித் துறைக்கு ரூ.27,000 கோடியை ஒதுக்கியுள்ளார் முதல்வர்!

## நெல்லையில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!



நெல்லை.பிப்.28.

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஊராட்சி அலுவலகத்தில் மாவட்ட ஊராட்சி மூலம் ரூபாய் 1.2 கோடி மதிப்பீட்டில் 9 ஊராட்சி ஒன்றியங்களுக்கு தூய்மைப் பணிகள் மேற்கொள்வதற்கான 39 மின்கல வாகனங்கள் வழங்கும் நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு ஆகியோர் பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், முன்னாள் அமைச்சர் மைதீன்கான், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி மனோகரன், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், ஆணையாளர் சுகபுத்ரா, துணை மேயர் ராஜ்,மாவட்ட ஊராட்சி மன்ற குழு தலைவர் வி.எஸ். ஆர்.ஜெகதீஸ்,ஆகியோர் முன்னிலையில் தூய்மை பணியாளர்களிடம் வழங்கி ரூபாய் 1 கோடி மதிப்பில் நாங்குநேரி மற்றும் களக்காடு வட்டாரங்களில் வளர்ச்சி திட்ட பணிகளை துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என்.நேரு தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் நலன் கருதி பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து திராவிட மாடல் ஆட்சியை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அரசின் திட்டங்கள் ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி உறுப்பினர்கள் மூலமே மக்களை சென்றடைகிறது.

**நகர்ப்புற உள்ளாட்சிக்கு ரூ.25,000 கோடி!**

கிராமப் பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி,மின்விளக்கு என அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றும் முக்கிய பணி ஊராட்சி தலைவர்களிடம் தான் உள்ளது. மக்களுடன் நேரடியாக நெருங்கிய தொடர்பில் உள்ளவர்கள், உள்ளாட்சித் துறைக்கு முதலமைச்சர் அவர்கள் பணிகளை மேற்கொள்வதற்காக அதிக அளவில் நிதி ஒதுக்கி உள்ளார்கள். ஊரக உள்ளாட்சிக்கு 27,000 கோடியும், நகர்ப்புற உள்ளாட்சிக்கு 25,000 ம் கோடியும் நிதி வழங்கப்படுகிறது.

**மின்சாரம் தயாரிக்கும் திட்டம்!**

மாநகராட்சி,நகராட்சி பகுதிகளில் தூய்மை பணியாளர்களுக்கு மின்கலன் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. கிராமங்களும் தூய்மையாக சுகாதாரமாக இருக்க வேண்டுமென கிராமப் பகுதிகளுக்கும் மின்கலன் வாகனம் வழங்கப்பட்டு வருகிறது. உள்ளாட்சி அமைப்புகளில் சேகரிக்கப்படும் குப்பை கள் மக்கும் குப்பை, மக்காத குப்பை என பிரிக்கப்பட்டு உரமாகவும், எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. மக்காத குப்பையைக் கொண்டு சிமெண்ட் ஆலைகளுக்கு எரிபொருளாக வழங்கப்படுகிறது. குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்தி அதிலிருந்து நாமே மின்சாரம் தயாரிக்க முதலமைச்சர் அவர்களிடம் அனுமதி கேட்டுள்ளோம். அனுமதி கிடைத்தவுடன் தமிழகத்தில் முதல் கட்டமாக கோவை,மதுரையில் குப்பையில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தொடங்கப்படும். கிராம ஊராட்சிகளை தூய்மையான சுகாதாரமாக வைத்துக் கொள்ளவும், பொது மக்களுக்கு சுகாதாரமான குடிநீர் கிடைப்பதற்கும் உறுதுணையாக இருந்து செயல்பட வேண்டும்.குப்பை இல்லாத மாநிலமாக தமிழ்நாடு இருக்க வேண்டும்.

இவ்வாறு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சரவணன், மாவட்ட ஊராட்சி செயலாளர் விசாலி, துணை தலைவர் செல்வலட்சுமி அமிதாப்,பாளை ஒன்றிய குழு தலைவர் கே.எஸ். தங்கபாண்டியன் உள்பட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள்,அரசு அலுவலர்கள் தூய்மை பணியாளர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் பிறந்த நாள் விழாவை

# தென்காசி வடக்கு மாவட்டம் முழுதும் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தென்காசி.பிப்.28

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க செயல்வீரர்கள் கூட்டம் 25 ஆம் தேதி செவ்வாய்கிழமை சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் கோ.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ பங்கேற்று திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது தொடர்பாகவும் மற்றும் பல்வேறு ஆலோசனைகள் வழங்கி உரையாற்றி னார்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனிவாசன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், சங்கரன்கோவில் தொகுதி பார்வையாளர் ராமஜெயம்,மாவட்ட பொருளாளர் சரவணன் துணைச் செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா, பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமிபாண்டியன், தேவதாஸ்,சாகுல் ஹமீது, மகேஸ்வரி,மாரிசாமி,பி.மாரிச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன்,பொன் முத்தையா பாண்டியன்,கடற்கரை, பூசைப் பாண்டியன்,சேர்மத்துரை, கிறிஸ்டோபர், பெரியதுரை, ராமச்சந்திரன், வெள்ளத்துரை,பால்ராஜ்,குணசேகரன், நகர செயலாளர் பிரகாஷ் (சங்கரன்கோவில்)பேரூர் செயலாளர்கள் குருசாமி,ரூபி பாலசுப்பிரமணியன்,மாரிமுத்து,சேது சுப்பிர மணியன், கழக மூத்த முன்னோடி சங்கரதாஸ், உட்பட அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேரூர்,கழக நிர்வாகி கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களின் பிறந்த நாளான மார்ச் 1ஆம் தேதி நாள் அன்று நகர,ஒன்றிய,பேரூர் பகுதிகளில் கோடை காலத்தை முன்னிட்டு நீர்மோர் பந்தல் வைத்து சிறப்பாக செயல்பட வேண்டியது. அரசு பொது மருத்துவமனையில் அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குவது,பொது மருத்துவமனையில் சிகிச்சை பெரும் காச நோயாளிகளுக்கு சிறப்பு உணவு வழங்குவது,அரசு பொது மருத்துவமனையில் ரத்த தானம் வழங்குவது,அந்தந்த ஒன்றிய நகர பேரூர் பகுதிகளில் செயல்பட்டு வரும் மாற்று திறனாளிகள், மனநலம் குன்றிய குழந்தைகள் தங்கி உள்ள இடங்களுக்கு சென்று சிறப்பு உணவு வழங்குவது, சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நடத்தி பரிசு வழங்குவது, பெண்களுக்கான கோலப் போட்டி நடத்தி பரிசு வழங்குவது, ஏழை, எளியோர்களுக்கு நலத்திட்டங்கள், மூன்று சக்கர மிதிவண்டி, தையல் இயந்திரம்,சேலை வேட்டி போன்றவை வழங்குவது. பள்ளியில் கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு வழங்க வேண்டிய உதவித்தொகைக்கான நிதியை ஒன்றிய அரசு வழங்காமல் இருப்பதற்கு இக்கூட்த்தில் கண்டனம் தெரிவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

உடனடியாக நிதியை வழங்கவும் வேண்டும்.

ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கையை எதிர்த்தும் அதனால் மாணவர்கள் பாதிக்கும் தீமைகளை துண்டு பிரசுரம், தெருமுனை பிரச்சாரம், பொதுக்கூட்டம் நடத்துவது என்றும்.

முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க.அரசைக் கண்டித்து தென்காசி ரயில் நிலையம் முன்பு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி மற்றும் மாணவர் கூட்டமைப்பு சார்பில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ரமேஷ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்று கோஷங்களை எழுப்பி கண்டன உரையாற்றி னார்.உடன் முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, மாவட்ட பொருளாளர் ஷெரிப், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செல்லத்துரை, சேசுராஜன்,ஷேக் தாவுது, முத்துப்பாண்டி,சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கலை கதிரவன் (தென்காசி) நவ்ஷாத் (கடையநல்லூர்) உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




தேனி வடக்கு மாவட்டம் போடிநகர பொது உறுப்பினர்கள் கூட்டம் போடி நகர செயலாளர் புருஷோத்தமன் தலைமையில் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு உரையாற்றினார். போடி தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன், மாவட்ட துணை செயலாளர் செந்தில் முருகன், திருகண்ணன், நகர மன்ற தலைவர் ராஜராஜேஸ்வரி சங்கர் செயற்குழு உறுப்பினர் சங்கர், பொதுக்குழு உறுப்பினர் ராஜாரமேஷ், வடக்கு மாவட்ட அயலகஅணி அமைப்பாளர் ராஜன், மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் நகர கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு – இன்று

# திருச்செந்தூரில் ஐந்தாயிரம் பேருக்கு அறுசுவை உணவு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் அறிவிப்பு!



திருச்செந்தூர், பிப்., 27

தூத்துக்குடி திமுக தெற்கு மாவட்ட செயலாளரும், தமிழக மீன்வளம் மீனவர்நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணன் அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாடு முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை மார்ச், ஏப்ரல் மாதம் முழுவதும் தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக சார்பில் வெகுவிமரிசையாக கொண்டாடப்பட உள்ளது. இதன்படி மார்ச் 1ம் தேதி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, பகுதி, நகர, பேரூர், ஊராட்சி கிளைக்கழக பகுதிகளில் கட்சி கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்படும். மேலும் அன்றைய தினம் அரசு ஆஸ்பத்திரிகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம், தாய் சேய் நல பெட்டகங்களும் வழங்கப்படும். தொடர்ந்து மார்ச், ஏப்ரல் மாதம் முழுவதும் ஒன்றிய, நகர பகுதிகளில் பொதுக்கூட்டங்கள் நடத்தி, நலத்திட்ட உதவிகள் வழங்கியும், வாழ்வாதாரத்தற்கு தேவையான உபகரணங்கள், பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம், கல்வி உபரகரணங்கள், தூய்மை காவலர்களுக்கு சீறுடை மற்றும் உணவு பொருட்கள் வழங்குதல், ஆதரவற்ற முதியோர்கள், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு உணவு வழங்குதல், கபடி போட்டி, கால் பந்து, கைப்பந்து, கிரிக்கெட் போட்டி, ஓட்டப்பந்தயம், மாரத்தான் போட்டி, சைக்கிள் போட்டி என பல்வேறு நிகழ்ச்சிகள் விழாக்களாக மாவட்டம் முழுவதும் கொண்டாடப்பட உள்ளது. இதன் ஒரு பகுதியாக இன்று பிப்., 28ம் தேதி திருச்செந்தூர் வஉசி திடல் அருகில் தெற்கு மாவட்ட திமுக சார்பில், எனது தலைமையில் 5 ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் அனைத்து பொதுமக்களும், மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர், ஊராட்சி கிளைக்கழக நிர்வாகிகளும், கழக முன்னோடிகளும், சார்பு அணி நிர்வாகிகளும், மக்கள் பிரதிநிதிகளும் திரளாக கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என அறிக்கையில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### நாகர்கோவில் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள்

# இயல்பு கூட்டம்: 2025 - 2026ம் நிதி ஆண்டிற்கான பட்ஜெட் தாக்கல்!

## மாவட்ட செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

நாகர்கோவில், பிப்.28–

நாகர்கோவில் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் இயல்பு கூட்டம் மற்றும் 2025–2026ம் நிதி ஆண்டிற்கான உத்தேச பட்ஜெட் தாக்கல் மாமன்ற கூட்ட அரங்கில் வைத்து 25.02.2025, செவ்வாய்க் கிழமை அன்று கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது.

ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்ஸி லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் 2025 26ம் நிதியாண்டிற்கான உத்தேச பட்ஜெட் தயாரிக்கப்பட்டு ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா மாநகராட்சி மேயர் ரெ.மகேஷிடம் வழங்கினார். அதனை மேயர் மாமன்ற கூட்டத்தில் தாக்கல் செய்தார்.

பட்ஜெட்டில் வருவாய் மற்றும் மூலதன நிதியாக ரூ. 198 கோடியே 81 லட்சம், குடிநீர் மற்றும் வடிகால் நிதியாக ரூ. 87 கோடியே 76 லட்சம் என மொத்தம் ரூ. 286 கோடியே 57 லட்சம் வருவாய் கிடைக்கும் எனவும், இதில், வருவாய் மற்றும் மூலதன நிதி செலவாக ரூ. 202 கோடியே 92 லட்சம், குடிநீர் மற்றும் வடிகால் நிதியாக ரூ. 95 கோடியே 88 லட்சம் என மொத்தம் ரூ. 298 கோடியே 80 லட்சம் செலவாகும். இதனால் ரூ. 12 கோடியே 23 லட்சம் பற்றாக்குறை ஏற்படும் என்றும் நிதி நிலை அறிக்கையில் மாநகராட்சி மேயர் தெரிவித்தார்.

நாகர்கோவில் மாநகரில் தற்போது தினமும் 150 டன் குப்பை சேகரிக்கப்படுகிறது. இதில், 35 முதல் 40 டன் குப்பைகள்தான் உரமாக மாற்றப்படுகிறது. மீதமுள்ள 110 டன் குப்பைகள் வலம்புரிவிளை பகுதியில் தினமும் கொட்டப்படுகிறது. இதனால் அங்கு மலைபோல் குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன. இதற்கு தீர்வு காணும் வகையில், குப்பைகளை உரமாக மாற்றுவதற்கு கூடுதல் நிதி ஒதுக்க தமிழ்நாடு அரசிடம் கோரும் வகையில், அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதேபோல், புதைச்சாக்கடை திட்டப் பணிகளையும் விரைந்து நிறைவு செய்திட துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தப்பட்டது. கோடை காலத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் புத்தன் அணை குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. முக்கடல் அணையின் நீர்மட்டம் மைனஸ் நிலைக்கு சென்றாலும், புத்தன் அணை நீர் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் என மாநகராட்சி மேயர் அவர்கள் தெரிவித்தார். மேலும், நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள், மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் உதவி ஆணையாளர் பாலசுந்தரம், மண்டல தலைவர்கள் இ.ஜவகர், கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், பா.முத்துராமன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



நாகர்கோவில் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் இயல்பு கூட்டம் மற்றும் 2025 2026ம் நிதி ஆண்டிற்கான உத்தேச பட்ஜெட் தாக்கல் மாமன்ற கூட்ட அரங்கில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்ஸி லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் 2025 2026ம் நிதியாண்டிற்கான உத்தேச பட்ஜெட் தயாரிக்கப்பட்டு ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா மாநகராட்சி மேயர் ரெ.மகேஷிடம் வழங்கினார். அதனை மேயர் மாமன்ற கூட்டத்தில் தாக்கல் செய்தார். கூட்டத்தில் உதவி ஆணையாளர் பாலசுந்தரம், மண்டல தலைவர்கள் இ.ஜவகர், கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், பா.முத்துராமன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.